**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 264 of 2023**

Prosecution witness LW 4(PW1) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade-I B.C., on date 12.09.2024 in accordance wigh provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | நாராயணசெட்டி | Father Name | : | டி.முனுசாமிசெட்டி |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**<u>முதல் விசாரணை:</u>**

தற்போது நான் தென்னந்தூர் என்ற இடத்தில் குடியிருக்கிறேன் , நான் இதற்கு முன்பு கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன் . இந்த சம்பவம் நடக்கும் போது பெரியமடகுண்டப்பள்ளியில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். 02.05.1997 –யில் இரவு 8.00 மணிக்கு எனக்கு தகவல் வந்து தலி போலீசார் வந்து என்னை அழைத்து சென்றார்கள் , ஏதோ மர்டர் ஒன்று நடந்து உள்ளது என்றும் அது உப்பாரப்பள்ளியில் உள்ள பெரிய கோடிப்பள்ளி ரோட்டில். மண் ரோட்டில் அந்த கொலை நடந்து இருப்பதாகவும் என்னை வரும் படி தலி போலீசார் என்னை கூப்பிட்டார்கள் . இரவு 8.00 மணிக்கு எங்கள் வீட்டில் இருந்த புறப்பட்டோம் அதற்கு முன்பு போலீசார் அந்த பாடியை போஸ்மாடத்திற்கு எடுத்து சென்று விட்டதாகவும் அதனால் என்னை காவல் நிலையம் அழைத்து சென்றார்கள் . போலீசார் ரிப்போட் எழுதி என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் . அதன் பிறகு என்னை அழைந்து வந்து என் வீட்டில் விட்டார்கள். இறந்து போன நபர் பெயர் கோபி என்று சொன்னார்கள். அவர் யார் எங்கு வைத்து கொலை செய்தார்கள் . என்ற விவரம் எனக்கு தெரியாது. தற்போது காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அ.த.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை .

சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி , அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு வழக்கறிஞர் மேலும் கேள்வி கேட்க அனுமதிக்கப்படுகிறார்.

02.05.1997 யில் அன்று இரவு 8.00 மணிக்கு என் அலுவலகத்தில் இருந்தேன் என்று சொன்னால் அது தவறு . அவ்வாறு நான் அலுவலகத்தில் இருந்த போது உப்பாரப்பள்ளியில் சேர்ந்த மஞ்சுநாதன் பெரியகோடிப்பள்ளியில் ஒரு நபரை யாரோ இரு நபர்கள் கத்தியால் குத்தி கொலை செய்துவிட்டு மோட்டார் சைகிளியில் சென்று விட்டதாக எனக்கு தகவல் கொடுத்ததாக நான் போலீஸ் விசாரணையில் சொல்லி இருக்கிறேன் என்று சொன்னால் அது தவறு. அந்த சம்பவ இடத்தை பார்வையிட்டு அதன் பிறகு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்று சொன்னால் அது தவறு. இது சம்மந்தமாக 03.05.1997 யில் நான் புகார் கொடுத்தேன் என்று சொன்னால் அது தவறு . புகாரில் உள்ள விவரங்கள் உண்மையானது என்றும் போலீசார்யிடம் கொடுத்த வாக்குமூலத்தின் உள்ள விவரங்கள் உண்மையானது என்றும் தற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டி போலீசார்யிடம் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும் புகார் கொடுக்கவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது தவறு.

Additional District Judge

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN